# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 191 | புதன்கிழமை Wednesday | 07.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


## 2 தொகுதிகளில் இடைத்தேர்தல்:

# மதுராந்தகத்தில் 70.31%, தாராபுரத்தில் 68.08% வாக்குப்பதிவு



தமிழகத்தில் மதுராந்தகம், தாரா புரம் ஆகிய தொகுதிகளில் இடைத் தேர் தல் வாக்குப்பதிவு காலை 7 மணி தொடங்கி நடை பெற்று வ ருகிறது. இந்நிலையில் பிற்பகல் 3 மணி நிலவரப்படி, மதுராந்தகத்தில் 70.31%, தாராபுரத்தில் 68.08% வாக்குப்பதிவாகி உள்ளது.

வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை நடை பெறவுள்ளது. தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் 9-ம் தே தி எண் ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

மது ராந்தகம் தொகுதியில் மரகதம் குமரவேல் (தவெக), பரந்தாமன் (தி முக), கணிதா சம்பத் (அ தி முக), சு கந்தி (மார்க்சிஸ்ட்), ஜா னகிராமன் ( நாம் த மிழர்) மற்றும் சுயேட்சைகள் உட்பட 27 பேர்களத்தில்உள்ளனர்.

அதேபோல், தாராபுரம் தொ கு தி யில் சத்யபாமா (தவெ க ), சுகன்யா ( தி முக) , பானும தி (அதி மு க ) , ல ட்சும ணன் ( சி பி ஐ ), கார்த்திகா ( நா த க ) உட்பட 22 பேர் போட்டியிடுகின்றனர்.

தா ராபு ரம் இடைத்தே ர்தலில் வாக்களித்த பி ன்ன ர் செய்தியாளர்களை சந்தித்த தவெக வேட்பாளர் சத்யபாமா, ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவேன் என நம்பிக்கை தெரிவித்தார்.

அ திமுக வேட்பாளர் பானுமதி வாக்களித்த பின்னர் அளித்தப் பேட்டியில், "தாராபுரம் எப்போதும் அதிமுகவின் கோட்டை. அதிமுக வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது" என்றார்.

புதுச்சேரியில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில், மங்கலம், தட்டாஞ்சாவடி என இரு தொகுதிகளில் போட்டியிட்டு வென்ற முதல்வர் ரங்கசாமி, தட்டாஞ்சாவடி தொகுதியை ராஜினாமா செய்தார். இதையடுத்து இடைத்தேர்தல் அட்டவணையை கடந்த மாதம் 7-ம் தேதி அதிகாரப்பூர்வமாக தலைமைத் தேர்தல் ஆணையம் வெளியிட்டது. அதன்படி இன்று (அக்.6) இடைத்தேர்தல்காலை7மணிக்கு தொடங்கியது.

தட்டாஞ்சாவடி தொகுதியில் அரசியல் கட்சிகள் சார்பில் 6 பேரும், சுயேச்சைகளாக 5 பேரும் மொத்தமாக 11 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதில் என். ஆர். காங்கிரஸ் வேட்பாளர் அசோக் ஆனந்த், காங்கிரஸ் வேட்பாளர் விநாயகம், திமுக வேட்பாளர் சேதுசெல்வம், இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் அ.மு.சலீம் ஆகியோருக்கு இடையே போட்டி நிலவுகிறது.

இந்நிலையில், தட்டாஞ்சாவடியில் பிற்பகல் 3 மணி நிலவரப்படி 68.91% வாக்குப்பதிவாகியுள்ளது.

மொத்தமுள்ள 31 வாக்குச்சாவடிகளில் கவுண்டம்பாளையம் முத்து ரத்தின அரங்கம் மேல்நிலைப்பள்ளி பூத், வினோபாநகர் பொய்யாகுளம் கம்யூனிட்டி ஹால் அரங்கு ஆகிய பூத்கள் பதற்றமானவையாக கண்டறியப்பட்டன. அதனால், இங்கு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மேற்கு வங்க நிலவரம்: மேற்கு வங்கத்தில் ரெஜிநகர் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் பிற்பகல் 3 மணி நிலவரப்படி, 69.29%, நந்திகிராம் தொகுதியில் 71.79% வாக்குப்பதிவாகியுள்ளது.அசாம் மாநிலம்நாகோன்மக்களவை தொகுயில் பிற்பகல் 3 மணிநிலவரப்படி,69.29%, நந்திகிராம் தொகுதியில் 70.25% வாக்குப்பதிவாகியுள்ளது.

# வேளாண் துறை செயலாளர் நியமனம் எப்போது?

# த.வெ.க. அரசுக்கு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி கேள்வி



சென்னை: விவசாயிகளை வஞ்சிக்கும்தவெக ஆட்சியில் வேளாண்மை துறைசெயலாளர்நியமனம் எப்போது? என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறைச் செயலாளராக இருந்த சங்கர் ஐஏஎஸ் தொல்லியல் ஆணையராகப் பணியிட மாற்றம் செய்யப்பட்டு ஒரு மாதம் ஆகப் போகிறது. ஆனால், இப்போது வரை வேளாண் துறைக்கு முழுநேரப் பொறுப்பில் புதிய செயலாளர் நியமிக்கப்படாமல் காலம் தாழ்த்தப்படுவது, விவசாய பெருமக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

தனி நிதிநிலை அறிக்கையைக் கொண்ட வேளாண் துறை போன்ற ஒரு முக்கியத் துறைக்கு முழுநேரப் பொறுப்பில் செயலாளர்கூட இல்லாமல் இருப்பதை என்ன காரணம்சொல்லி இவர்களால் நியாயப்படுத்த முடியும்?

பருவமழை தொடங்கவுள்ள நேரத்தில், வேளாண் துறைக்கு நிலையான நிர்வாகத் தலைமையும்,துரிதமான ஒ ரு ங் கி ணை ப் பு ம் தேவை என்பதை எவரும் மறுக்க முடியாது.

குறிப்பாக, விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்புடைய முடிவுகள் தாமதமின்றி எ டு க் க ப் ப டு வ த ற் கு ம், மாவட்ட அளவிலான பணிகளைத் தொடர்ந்து க ண் கா ணி ப் ப த ற் கு ம் இது அவசியமானது. இதனை கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டிய, துறை அமைச்சரும் முதல்வரும் வேறு வேலைகளில்தான் மும்முரம் காட்டுகின்றனர்.

தவெக ஆட்சிக்கு வந்ததுமே, பயிர்க்கடன் தள்ளுபடியில் மோசடி செய்தார்கள். இயற்கையால் குறுவை பொய்த்து, தவெக அரசின் சிந்தனையற்ற செயல்பாட்டால் சம்பா சாகுபடியும் பாதிப்பைச் சந்தித்திருக்கிறது. இப்படித் தொடர் ஏமாற்றங்களால் விரக்தியில் உள்ள விவசாயப் பெருமக்கள், தமிழ்நாடெங்கும் போராடி வருகின்றனர்.

நேற்றுகூட , கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் வராததால், முத் து ப் பே ட் டை யி ல் விவசாயிகள் சாலை மறியல் செய்துள்ளனர். தண்ணீர் திறந்துவிடக் கோரி, விவசாயிகள் வீராணம் ஏரியில் இறங்கிப் போராட்டம் நடத்தியுள்ளனர். தேர்தல் அறிக்கையில் சொன்னபடி, பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வலியுறுத்தி, சென்னையில் வருகிற 14 ஆம் தேதி, தலைமைச் செ ய ல க த் தை முற்றுகையிடப் போவதாகத் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் கூறியுள்ளனர்.

இத்தகைய சூழலில், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறைக்கு அனுபவம்வாய்ந்தமூத்த ஐஏஎஸ் அதிகாரி நியமிக்கப்பட்டு, விவசாயி களின் துயர் துடைப்பதற்கான பணிகள் நடைபெற்றிருக்க வேண்டும்.

ஆனால்,அந்தத் துறையைப் பொறுப்பு ஏற்பாட்டில் விட்டிருப்பது, வேளாண்குடிப் பெருமக்களின் நலனில் இந்த அரசுக்குத் துளியும் அக்கறை இல்லை என்பதையே காட்டுகிறது. 'செயல்படாத அமைச்சர், இல்லாத செயலாளர்' எனத் தவெக ஆட்சியைப் போலவே வேளாண் துறையும் தி ண் ட ா டு கிறது.

உலகுக்கே உணவளிக்கும் உழவைக் காப்பாற்றுவதில் இனியும் காலதாமதம் செய்யாமல், புதிய முழுநேர வேளாண்மைத் துறைச் செயலாளரை உடனடியாக நியமிக்க,அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தூங்குமூஞ்சி தவெக அரசை வலியுறுத்துகிறேன்"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# டெல்லியில் இண்டியா கூட்டணி போராட்டம்

# ராகுல் காந்தி, பிரியங்கா உள்ளிட்டோர் கைது



புதுடெல்லி: தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை சந்திக்க 300-க்கும் மேற்பட்ட எம்பிக்கள் விரும்புவதாகவும், ஆனால் தங்களுக்கு அனுமதி மறுக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ள ராகுல் காந்தி, மக்களை பிரதிநிதித்தவப்படுத்தும் எம்பிக்களை தேர்தல் ஆணையம் சந்திக்கவில்லை என்றால், ஜனநாயகத்துக்கு என்ன அர்த்தம் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி வலக வலியுறுத்தி காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் டெல்லியில் இன்று பேரணியில் ஈடுபட்டன. நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து தேர்தல் ஆணைய அலுவலகத்தை நோக்கி பேரணி புறப்பட்டது. இதில், காங்கிரஸ் தலைவரும் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், காங்கிரஸ் எம்பி பிரியங்கா காந்தி உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட எம்பிக்கள் கலந்து கொண்டனர்.

இந்த பேரணியை முன்னிட்டு, தேர்தல் ஆணைய அலுவலகப் பகுதியில் பாதுகாப்பு ப ல ப் ப டு த் த ப் ப ட் ட து . போலீஸார் பெருமளவில்குவிக்கப்பட்டதோடு, ஏராளமான தடுப்புகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. தேர்தல் ஆணைய அலுவலக வளாகத்துக்குள் நுழைய முயன்ற ராகுல் காந்தி, அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் தடுக்கப்பட்டனர்.இதனால்,அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், எம்பிக்கள் தடுக்கப்பட்டது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, "இன்று 300க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் ஞானேஷ் குமார் மற்றும் தேர்தல் ஆணையர்களைச் சந்திக்க விரும்பினர். ஆனால், நாங்கள் தடுக்கப்பட்டோம். நாங்கள் நாட்டின் மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகிறோம். நாங்கள் அவர்களின் குரலாக இருக்கிறோம்.

தேர்தல் ஆய அலுவலகத்துக்கு செல்ல எங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. மக்களை பிரதிநிதித்தவப்படுத்தும் எம்பிக்களை தேர்தல் ஆணையம் சந்திக்கவில்லை என்றால், ஜனநாயகத்துக்கு என்ன அர்த்தம்?

நரேந்திர மோடி, அமித் ஷா, மோகன் பாகவத், ஞானேஷ் குமார் ஆகியோர் நாட்டின் ஜனநாயகத்தைச் சீர்குலைத்துள்ளனர். இது ஒட்டுமொத்த நாட்டுக்கும் தெரியும். இவர்கள் வாக்குகளைத் திருடி நாட்டை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர். இவர்களில் யாரும் தப்ப முடியாது. இவர்கள் அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுவதை நீங்கள் பார்ப்பீர்கள். நாங்கள் அவர்களை வெறுமனே எதிர்க்க மாட்டோம்;அழிப்போம்" என தெரிவித்தார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



ஊரக வளர்ச்சித்துறை சார்பில் ஊராட்சிகள் தோறும் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுத்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புதிட்டத்தில் பணிகள் செயல்படுத்தப்படுகிறது. அதில், மங்களூர் ஒன்றியத்தில் கடந்த 2 ஆண்டுகளாக நடந்து முடிந்த பணிகளுக்கான நிதி விடுவிக்கவில்லை. இதனால், அதிருப்தியடைந்த கான்ட்ராக்டர்கள் 50க்கும் மேற்பட்டோர், நேற்று பகல் 11:30 மணியளவில் மங்களூர் ஒன்றிய அலுவலகம் முன் பிச்சை எடுக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின், மங்களூர் பி.டி.ஓ.,விடம் நிதியை விடுவிக்க கோரி மனுக்கள் அளித்தனர். பின், பகல் 12:00 மணியளவில் அனைவரும் கலைந்து சென்றனர். இது குறித்து கான்ட்ராக்டர்கள் கூறுகையில்., 'மங்களூர் ஒன்றியத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தில் நடந்து முடிந்த பணிகளுக்கு, ரூ., 50. கோடிக்கும் மேல் நிதி விடுவிக்கவில்லை. இதே நிலை தொடர்ந்தால், பல்வேறு போராட்டங்களில் ஈடுபட தீர்மானித்துள்ளோம்' என்றனர்.

# சென்னை, கோவையில் இருந்து சுரண்டைக்கு சிறப்பு பஸ்கள் இயக்க ஒய்எம்சிஏ கோரிக்கை

சுரண்டையில் இருந்து சென்னை மற்றும் கோவைக்கு ஆயுதபூஜை மற்றும் தீபாவளி பண்டிகைக்கான சிறப்பு பஸ்களை இயக்க சுரண்டை ஒய்எம்சிஏ கோரிக்கை விடுத்துள்ளது.



இது குறித்து சுரண்டை ஒய்எம்சிஏ தலைவர் ஏஎஸ்ஏஆர் பாலச்சந்திரன், செய்தி தொடர்பாளர் ராஜகுமார் ஆகியோர் தமிழ்நாடு முதலமை ச்சருக்கு அனுப்பியுள்ள கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது

தென்காசி மாவட்டம் சுரண்டை மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், மாணவர்கள், அரசு அலுவலர்கள் சென்னை, மற்றும் கோவை சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசித்து வருகின்றனர். இவர்கள் தீபாவளி, பொங்கல், புத்தாண்டு, மற்றும் ஆயுதபூஜை பூஜை விடுமுறை தினங்களை முன்னிட்டு பண்டிகைகளை கொண்டாட சொந்த ஊரான சுரண்டை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளுக்கு வந்து செல்வதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். ஆனால், சுரண்டையிலிருந்து சென்னைக்கும், சென்னையில் இருந்து சுரண்டைக்கும் நேரடி அரசு பஸ் வசதி இல்லை. அதே போன்று சுரண்டையில் இருந்து கோவைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பேரூந்துகள் இல்லை (அரசு விரைவு போக்குவரத்து கழகத்தின் மூலம் ஒரு பஸ் மட்டுமே இயக்கப்படுகிறது அதிலும் முக்கிய தினங்களில் இருக்கைகள் கிடைப்பதில்லை)

ஆகவே இப்பகுதி பொதுமக்கள் பண்டிகைகளைக்கொண்டாடிவிட்டு சென்னை மற்றும் கோவைக்கு செல்ல போதிய பஸ் வசதியின்றி பல பேருந்துகள் மாறியும் அல்லது அதிகமாக இயக்கப்படும் தனியார் பேருந்துகளில் அதிக கட்டணம் செலுத்தியும் வந்து செல்கின்றனர். இதனால் பெண்கள், முதியோர் , மற்றும் மாணவிகள் கடுமையான சிரமங்களை அடைகின்றனர்

ஆகவே,சென்னை மற்றும் கோவை சுற்றுவட்டாரப் பகுதியில் வசிக்கும் சுரண்டை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில், சென்னை மற்றும் கோவையில் இருந்து சுரண்டைக்கு 16-10-2026 வெள்ளிக்கிழமை மற்றும் சுரண்டையில் இருந்து சென்னை மற்றும் கோவைக்கு 20-10-2026 செவ்வாய் கிழமையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக (சாதாரண) சிறப்பு பேரூந்துகள் இயக்கவும் அந்த பேருந்துகளுக்கு முன்பதிவு வசதி செய்து தருமாறும்

அதே போன்று தீபாவளி பண்டிகைகொண்டாடவும் இருமார்க்கத்திலும்சிறப்பு பேரூந்துகள் இயக்கவும் அதற்காகான ஆன்லைன் முன்பதிவு வசதி ஏற்படுத்தவும் வேண்டும் எனவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஏற்கனவே கடந்த 15 வருடங்களாகபுளியங்குடி, தென்காசி, சங்கரன்கோவில் அரசு போக்குவரத்து கழக பணிமனைகளில் இருந்து முன்பதிவில்லா சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன என்பதனையும் இதனால் இப்பகுதியைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பயனடைவார்கள் என்பதையும்தங்களின்மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். என தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா,?

# ஆலங்குளத்தில் நம்ம டாக்டர் இம்மானுவேல் நற்பணி இயக்க ஆலோசனைக் கூட்டம்



தென்காசி மாவட்டம், ஆலங்குளத்தில் நம்ம டாக்டர் இம்மானுவேல் நற்பணி இயக்கத்தின் 2-ம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கீழப்பாவூர் தமிழ் இலக்கிய மன்றத் தலைவர் செல்வன் தலைமை வகித்தார்.

பாரத் ஸ்கேன்ஸ் நிறுவனரும், நம்ம டாக்டர் இம்மானுவேல் நற்பணி இயக்கத்தின் தலைவருமான நம்ம டாக்டர் இம்மானுவேல் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில், கடந்த ஓராண்டில் இயக்கத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட இலவச கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம்கள், மருத்துவ உதவிகள் மற்றும் பல்வேறு சமூக நலப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இயக்கத்தின் 2- ம் ஆண்டு செயல்பாடுகளை மேலும் விரிவுபடுத்தி, பல்வேறு கிராமங்கள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் மக்கள் தேவைக்கேற்ப நலத்திட்டங்களை செயல்படுத்தவும், தன்னார்வலர்களை அதிகளவில் இணைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

கீழப்பாவூர், ஆலங்குளம், மானூர், வள்ளியூர், நாங்குநேரி, களக்காடு, ராதாபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த உள்ளாட்சிபிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டு இயக்கத்தின் சேவைகளுக்கு பாராட்டு தெரிவித்தனர்.

கூட்டத்தில் ஊராட்சி மன்றத் தலைவர்கள், உள்ளாட்சிபிரதிநிதிகள், நற்பணி இயக்க நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என 200-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# ஆற்காடு நகர்மன்றக் கூட்டத்தில் மக்கள் நலக் கோரிக்கைகளை வலியுறுத்தி 2வது வார்டு உறுப்பினர் பொன் ராஜசேகர் காரசார பேச்சு

ஆற்காடு நகராட்சியின் 2-வது வார்டு உறுப்பினரும் சமூக ஆர்வலருமான பொன் ராஜசேகர், சமீபத்தில் நடைபெற்ற நகர்மன்றக் கூட்டத்தில் பொதுமக்களின் அவசியத் தேவைகளுக்காகத் தீவிரமாக குரல் கொடுத்தார்.



நகர்மன்றக் கூட்ட அ ரங்கில் உள்ள அம்பேத்கர், முதலமைச்சர், காமராஜர் மற்றும் கலைஞர் உள்ளிட்ட தலைவர்களின் படங்களை அகற்றாமல் தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும், குடிநீர் குழாய் பதிப்பது மட்டுமன்றி இதர பல்வேறு பணிகளுக்காகவும் தோண்டப்படும் சாலைகளை ஒப்பந்ததாரர்கள் சரியாக மூடிச் சீரமைக்காமல் விட்டுச் செல்வதால், இருசக்கர வாகன விபத்துகள் ஏற்பட்டுச் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பாதிக்கப்படுகின்றனர் என்றும்,அந்தச் சாலைகளை உடனடியாகச் சீரமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

திறப்பு விழாவுக்குத் தயாராக உள்ள புதிய பேருந்து நிலையத்தில், பல ஆண்டுகளாக வியாபாரம் செய்துவந்த உள்ளூர் வணிகர்களுக்கே மீண்டும் கடைகளை வழங்கிட நகராட்சி நிர்வாகம் முன்னுரிமை அளிக்கவேண்டும்எனக் கோரினார். அத்துடன், நகர்மன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானப் பணிகள் எந்த நிலையில் உள்ளன, அவை முடிவடைந்ததா இல்லையா என்ற விவரங்களை வெறும் தீர்மானத்தோடு நிறுத்திவிடாமல், ஒவ்வொரு நகர்மன்றக் கூட்டத்திலும் அதனுடைய நடப்பு நிலைக் குறித்துக் கட்டாயம் தெளிவுபடுத்த வேண்டும் என்றும், பணிகள் முடிந்த பிறகு அதுகுறித்த தகவல்களைச் சரியாக ஒப்படைத்து நிர்வாகம் வெளிப்படையாகச் செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பொதுமக்கள் நலனுக்காக நகர்மன்றத்தில் பொன் ராஜசேகர் பேசிய இந்தப் பேச்சு அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளத்திட்டத்தை கைவிட வேண்டும் இல்லையெனில் தமிழகம் முழுவதும் வணிகர்களை திரட்டி கடையடைப்பு போராட்டம்

## தமிழ்நாடு வியாபாரிகள் முன்னேற்ற சங்கத் தலைவர் தினகரன் வெள்ளையன் பேட்டி

தூத்துக்குடி மாவட்டத்தில் முள்ளக்காடு, கோவங்காடு, பழையகாயல் உள்ளிட்ட பகுதிகளில் கப்பல் கட்டும் தளம் அமைக்கும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும் என்றும், திட்டத்தை மாற்று இடத்தில் செயல்படுத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு வியாபாரிகள் முன்னேற்ற சங்கத் தலைவர் தினகரன் வெள்ளையன் வலியுறுத்தியுள்ளார்.



தூத்துக்குடியில் செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது: தூத்துக்குடி மாவட்டத்தில் முள்ளக்காடு, கோவங்காடு, பழையகாயல் உள்ளிட்ட பகுதிகளில் கப்பல் கட்டும் தளம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக கூறப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால், அப்பகுதிகளில் நீண்ட காலமாக உப்பு உற்பத்தி மற்றும் உப்பளத் தொழிலை நம்பி வாழ்ந்து வரும் உப்பள உரிமையாளர்கள், தொழிலாளர்கள் உள்ளிட்டோரின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படும்.

எனவே, உப்பளத் தொழிலை பாதிக்கும் வகையில் கப்பல் கட்டும் தளம் அமைக்கும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும். இந்த திட்டத்திற்கு தமிழ்நாடு வியாபாரிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தியாவில் குஜராத்துக்கு அடுத்தபடியாக தமிழகத்தில் தூத்துக்குடி பகுதியில் உப்பு உற்பத்தி முக்கிய பங்கு வகித்து வருகிறது. எனவே, உப்பு உற்பத்தி நடைபெறும் பகுதிகளை பாதிக்கும் வகையில் திட்டங்களை செயல்படுத்தாமல், மாற்று இடத்தை தேர்வு செய்து கப்பல் கட்டும் தளத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாற்று இடத்தில் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால், தமிழகம் முழுவதும்உள்ளவணிகர்களை ஒருங்கிணைத்து கடையடைப்பு உள்ளிட்ட போராட்டங்களை நடத்துவோம் என அவர் தெரிவித்தார்.

தூத்துக்குடி புதிய பேருந்து நிலையம் தொடர்பாக பேசிய தினகரன் வெள்ளையன், ஏற்கனவே சுமார் ரூ.3 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், தற்போது மீண்டும் ரூ.90 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான பணிகளுக்கு டெண்டர் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மக்களின் வரிப்பணம் மீண்டும் மீண்டும் ஒரே பணிக்காக செலவிடப்படுவது குறித்து அரசு உரிய விளக்கம் அளிக்க வேண்டும். தேவையற்ற நிதி விரயத்தை தவிர்த்து, பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளுக்கு நிதியை பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். மேலும், UPI மூலம் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளுக்கு வணிகர்கள் மீது கட்டணம் விதிக்கும் நடவடிக்கைகள் குறித்து அவர் எதிர்ப்பு தெரிவித்தார்.

இதுபோன்ற கட்டணங்கள் எதிர்காலத்தில் பொதுமக்களுக்கும் கூடுதல் சுமையாக மாறும் வாய்ப்பு உள்ளதாகவும், டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் நிலையில் வணிகர்கள் மீது கூடுதல் கட்டணம் விதிப்பது குறித்து அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் தமிழகம் முழுவதும் சாலையோர வியாபாரம் அதிகரித்து வருவதாக தெரிவித்த அவர், முறையாக கடை வைத்து வணிகம் செய்து வரும்வியாபாரிகள் பல்வேறு வகையான வரிகளை செலுத்தி வருவதாகவும், அவர்களுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறைவழங்கப்பட வேண்டும் என்றும் கூறினார். அதேநேரத்தில், சாலையோர வியாபாரத்தையும் உரிய முறையில் முறைப்படுத்த வேண்டும். தற்போது பெரிய நிறுவ னங்கள்கூட சாலையோர விற்பனை முறைக்கு மாறி வருவதால், சிறு மற்றும் குறு வணிகர்கள் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. ஆகவே முறையாக வரி செலுத்தி கடை நடத்தும் சிறு வணிகர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், சாலையோர வணிகத்தை முறைப்படு த்தவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வரி செலுத்தும் வணிகர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் தினகரன் வெள்ளையன்தெரிவித்தார்.

# தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட சுமார் ரூ.94,400 மதிப்பிலான 133 கிலோ எடை கொண்ட புகையிலைப் பொருட்களை பறிமுதல் செய்த அச்சன்புதூர் காவல்துறையினர்

தென்காசி மாவட்டத்தில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களின் புழக்கத்தை முற்றிலும் தடுக்கும் விதமாக தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.அசோக்குமார் அவர்களின் உத்தரவின் பேரில் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பு பணி மேற்கொண்டு வருகின்றனர்.



அதன்பேரில் இன்று (05.10.2026) அச்சன்புதூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அச்சன்புதூர் - காசிதர்மம் மெயின் ரோட்டில் காவல்துறையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது அவ்வழியாக வந்த காரைச் சோதனை செய்ததில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை கடத்தி வந்த அச்சன்புதூரைச் சேர்ந்த கனியப்பா மகன் சாகுல்ஹமீது(44),சாகுல் ஹமீது மகன் தாஜ்தீன் (47) ஆகிய 02 நபர்களை கைது செய்து, வழக்கு பதிவு செய்து அவர்களிடமிருந்து அரசால் தடை செய்யப்பட்ட ரூபாய் 94,400 மதிப்பிலான 133 கிலோ எடை கொண்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்து, வழக்கு பதிவு செய்து மேற்படி இரண்டு நபர்களையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

# தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஈ.ராஜா MLA அவர்களின் சகோதரர் பாலமுருகன் மறைவு; முன்னாள் அமைச்சர் கே.என். நேரு நேரில் அஞ்சலி

தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமானதிரு.ஈ.ராஜாMLA அவர்களின் உடன்பிறந்த சகோதரரும், தென்காசி 31-வது வார்டு தி.மு.க. நகர்மன்ற உறுப்பினருமான திரு. ஈ. பாலமுருகன் அவர்கள் மறைவையொட்டி, அவரது இல்லத்தில் இரங்கல் நிகழ்வு நடைபெற்றது.தென்காசிக்குவருகைபுரிந்த முன்னாள் அமைச்சர் திமுகழக முதன்மை செயலாளர் கே என் நேரு அவர்களை தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் அவர்கள் வரவேற்று மறைந்த தென்காசி 31 வது வார்டு நகர் மன்ற உறுப்பினரும் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ராஜா அவர்களின் சகோதருமான பாலமுருகன் அவர்கள் இல்லத்திற்குஅழைத்துச் சென்றார்



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், கழக முதன்மைச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திரு. கே.என். நேரு அவர்கள், முன்னாள் அமைச்சர் திரு. பி. மூர்த்தி அவர்கள் முன்னிலையில், ஈ. பாலமுருகன் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து,மாலைஅணிவித்து,மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, ஈ. ராஜா MLA மற்றும் அவரது குடும்பத்தினரை நேரில் சந்தித்த கே.என். நேரு அவர்கள், ஈ. பாலமுருகன் அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலையும், குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவித்தார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ. ராஜா, பாளையங்கோட்டை அப்துல் வகாப், இராமநாதபுரம் காதர் பாட்ஷா என்ற முத்துராமலிங்கம், சேடபட்டி மணிமாறன், சந்திரசேகர், தென்காசி டாக்டர் கலைகதிரவன், தென்காசி நகர்மன்றத் தலைவர் சாதிர், துணை மாவட்டச் செயலாளர்கள் கென்னடி, ஒன்றியச் செயலாளர்கள் வல்லம்திவான் ஒலி, சீனித்துரை, அழகுசுந்தரம், ஜே.கே. ரமேஷ், தென்காசி ஒன்றியக் குழுத் தலைவர் வல்லம் ஷேக் அப்துல்லா, இலஞ்சி மேலகரம் பேரூர் துணைச் செயலாளர் ஜீவானந்தம், மாவட்டத் தொண்டரணி அமைப்பாளர் இசக்கி பாண்டியன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் மஹ்முதா, தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் சபிக் அலி உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருநெல்வேலி மாவட்டம் கிருஷ்ணாபுரம் பாலன் மஹாலில் வைத்து பசுமை தாயகம் மற்றும் சென்னை வாழ் நெல்லை மக்கள் இணைந்து நடத்திய தாமிரபரணியின் நலவிரும்பிகளுக்குப் பாராட்டு மற்றும் விவசாயிகள் சந்திப்பு விழா நடைபெற்றது இந்நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தந்த சட்டமன்றத்தில் தாமிரபரணியைப் பாதுகாக்க குரல் கொடுத்த பசுமைக் தாயகம் சட்டப்பேரவைக் குழுத் தலைவர் மற்றும் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் முனைவர் சௌமியா அன்புமணி எம்.எல்.ஏ அவர்களை பா.ம.க திருநெல்வேலி தெற்கு மாவட்ட தொழிற்சங்க தலைவர் கூடங்குளம் து.சுரேஷ் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## கோவையில் பிஎஸ்ஜி சன்ஸ் மற்றும் அறக்கட்டளையின் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக, கோவையில் 17 வயதுக்கு உட்பட்ட மாணவ மாணவியர்களுக்கான கால்பந்து போட்டிகளின் துவக்கவிழா



கோவை பிஎஸ்ஜி நிறுவனம் தனது 100வது ஆண்டை கொண்டாடி வருகின்றது. இந்த நிறுவனத்தின் கீழ், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் என பல்வேறு நிறுவனங்கள் இயங்கி வருகிறது. இந்த நிலையில் பிஎஸ்ஜி நிறுவனத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக கோவை, பிஎஸ்ஜி கல்லூரி மைதானத்தில், 17 வயதிற்க்கு உட்பட்ட, மாணவ மாணவியர்களுக்கான மாவட்ட அளவிலான கால் பந்து போட்டிகளின் துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. ஒரு நூற்றாண்டு, ஒரு கொண்டாட்டம், ஒரு விளையாட்டு உணர்வு, என்ற கருப்பொருளின் பெருமையை பறைசாற்றும்விதமாகநடைபெற்று வரும் இந்த கால் பந்து போட்டியினை, பிஎஸ்ஜி நிறுவனத்தின் நிர்வாக அறங்காவலர் கோபாலகிருஷ்ணன், துவக்கி வைத்தார். இதில் சிறப்பு விருந்தினராக கோவை மாவட்ட கால்பந்து விளையாட்டு சங்கத்தின் செயலாளர் சிவ சுப்ரமணியன் போட்டிகளை துவக்கி வைத்தார். போட்டியின் துவக்க நாள் ஆட்டத்தை எதிர் கொண்ட மாணவர்களுக்கு கைகளை குலுக்கி, பிஎஸ்ஜி ஸ்கூல்ஸ் செயலாலர் நந்த கோபாலன், வாழ்த்துக்கள் கூறி, திறமைகளை வெளிபடுத்த ஊக்கபடுத்தினார். தொடர்ந்து செய்தியாளர்களைசந்தித்துபேசிய பிஎஸ்ஜி மெட்ரிக்குலேசன் பள்ளியின் முதல்வர் காயத்ரி கூறியதாவது..

பி.எஸ்.ஜி நிறுவனம் தனது நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில் மாவட்ட அளவிலான பள்ளிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டிகளை நடத்தி வருகின்றது. 17 வயதிற்கு உட்பட்ட மாணவ மாணவர்களுக்கான கால்பந்து போட்டியில் ஆண்கள் பிரிவில் 14 அணிகளும், பெண்கள் பிரிவில் 13 அணிகளும் பங்கேற்கின்றது. இதில் மொத்தமாக 300-க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இன்று முதல் வரும் 9ம்தேதி வரை நான்கு நாட்கள் நடைபெறும் இந்த கால்பந்து போட்டிகளில், கோவை மாவட்டத்தில் உள்ள பல்வேறு தனியார் பள்ளிகளை சேர்ந்த இளம் கால்பந்து வீரர்கள், தங்களது திறமைகளை வெளிப்படுத்த உள்ளதாக தெரிவித்தார். போட்டிகளில் சிறப்பாக விளையாடி வெற்றி பெறும் அணிகளுக்கு கோப்பைகள், பதக்கங்கள், மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது. மேலும் முதல் பரிசாக 20000 ரூபாயும், இரண்டாம் பரிசாக பத்தாயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 6 ஆயிரம் ரூபாயும், நான்காம் பரிசாக 4 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட உள்ளதாக தெரிவித்தார். மாணவர்களிடையேவிளையாட்டு மனப்பான்மை, அணி சேர்ப்பு, ஒழுக்கம் மற்றும் தலைமைத்துவ பண்புகளை வளர்க்கும் நிகழ்வாக, இந்த போட்டிகள் நடைபெற்று வருகின்றது என்றார். இந்த நிகழ்ச்சிகள் பி.எஸ்.ஜி உயர்நிலைப்பள்ளி வேடப்பட்டி முதல்வர் பரிமளா, பிஎஸ்ஜி பிரைமரி பள்ளி வேடப்பட்டி முதல்வர் ரவி, பிஎஸ்ஜி பிரைமரிபள்ளிபீளமேடு முதல்வர் சந்திரகலா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவை ராயல் கேர் மருத்துவமனையில் புதிய நரம்பியல் தீவிர சிகிச்சைப் பிரிவு துவக்கம்

## 14 படுக்கை வசதிகளுடன் அதி நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள தீவிர சிகிச்சை மையத்தை தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திறந்து வைத்தார்



கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில், நரம்பியல் நோய்களுக்கான 14 படுக்கைகள் கொண்ட நரம்பியல் தீவிர சிகிச்சைப் பிரிவு தொடங்கப்பட்டது. அதி நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்ட தீவிர சிகிச்சை பிரிவு மையத்தை தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைஅமைச்சர்வி. சம்பத் குமார் திறந்து வைத்தார்.

ராயல் கேர் மருத்துவமனையின் தலைவரும் நிர்வாக இயக்குனருமான டாக்டர் மாதேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இதற்கான துவக்கவிழாவில்,பேசிய அமைச்சர் சம்பத் குமார், தமிழகத்தில் மருத்துவத் துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சிகிச்சைக்கான ஆண்டு நிதி ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.25 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளதால் பலர் பயனடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

மேலும், விபத்து ஏற்படும் நிலையில் முதல் 48 மணி நேரம் மிகவும் முக்கியமானதாகும்.

இந்த காலகட்டத்தில் உயிரைக் காக்கும் அவசரஉயர்சிகிச்சை,அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இலவசமாக வழங்கப்பட்டு வருவதால் விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகள் குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்..

அனைத்து துறைகளிலும் வேகமாக முன்னேறி வரும் கோவையில், மருத்துவத் துறையிலும் உலகத் தரத்திலான நவீன தொழில்நுட்பங்களை ராயல் கேர் மருத்துவமனை தொடர்ந்து அறிமுகப்படுத்தி வருவது பெருமைக்குரியது என அமைச்சர் சம்பத் குமார் தெரிவித்தார்.

தொடர்ந்து,ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் மாதேஸ்வரன், புதிய நரம்பியல் தீவிர சிகிச்சைப் பிரிவின் சிறப்பம்சங்கள் குறித்து பேசினார்.

தொடர்ந்து பேசிய அவர்,நோயாளிகளின் நலன் கருதி,மருத்துவ துறையில் உள்ள , உலகின் முன்னனி தொழில் நுட்பங்களை கொண்டு வருவதில் ராயல் கேர் மருத்துவமனை இந்திய அளவில்முதன்மையான மருத்துவமனையாக இருப்பதாக அவர் கூறினார்.. இதனை தொடர்ந்து,நரம்பியல் தீவிர சிகிச்சைப் பிரிவின் தலைமை மருத்துவர் டாக்டர் சிவக்குமார், 14 படுக்கைகளுடன் அமைக்கப்பட்டுள்ள இப்பிரிவில் வழங்கப்பட உள்ள சிகிச்சை வசதிகள் மற்றும் நவீன மருத்துவக் கட்டமைப்புகள் குறித்து விளக்கினார்.

விழாவில் சூலூர் சட்டமன்ற உறுப்பினர் என்.எம்.சுகுமார்,மருத்துவ இயக்குனர் பரந்தாமன் சேதுபதி,சி.ஓ.ஒ.மணி செந்தில் குமார்,மருத்துவமனையின் மார்க்கெட்டிங் பிரிவு சீனியர் பொது மேலாளர் வெங்கடேஷ் உள்ளிட்ட மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக்கிடங்கு இயல்பு தணிக்கையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (06.10.2026) மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் ஈரோடு முதன்மை மாவட்ட நீதிபதி எஸ்.சமீனா மற்றும் மாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமி ஆகியோர்நேற்று(06.10.2026)தேசியசமரசதீர்வு3.0விழிப்புணர்வுபேரணியினை துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி உட்பட பலர் உள்ளனர்.

## அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கட்டாயம் பாடம் நடத்த வேண்டும்! புரட்சி பாரதம் கட்சி வலியுறுத்தல்




கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் செயல்படும் அரசு பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் தங்களுக்குரிய கற்பித்தல் பணியை முறையாக மேற்கொள்வதை மாவட்ட கல்வித்துறை உறுதி செய்ய வேண்டும் என புரட்சி பாரதம் கட்சியின் கள்ளக்குறிச்சி கிழக்கு மாவட்ட செயலாளர் முனைவர் K.K. ஏழுமலை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அரசுப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களுக்கு நிர்வாகப் பொறுப்புகளுடன் கற்பித்தல்பணியும்வழங்கப்பட்டுள்ளது. அரசு விதிமுறைகளின்படி தலைமை ஆசிரியர்கள் வாரத்திற்கு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பாடவேளைகளில் மாணவர்களுக்கு பாடம் நடத்த வேண்டும்.

ஆனால், சில அரசு பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாடம் நடத்தாமல், தங்களது கற்பித்தல்பணியையும் இடைநிலை ஆசிரியர்களிடம் ஒப்படைப்பதாக ஆசிரியர்கள் தரப்பில் புகார்கள் எழுந்துள்ளன. மேலும்,இதற்கு மறுப்பு தெரிவிக்கும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதாக மிரட்டுவதாக கூறப்படுவது கண்டிக்கத்தக்கது.

தலைமை ஆசிரியர்கள் தங்களது கற்பித்தல் பணியை முறையாக மேற்கொள்ள வேண்டும். அதேபோல், இடைநிலை ஆசிரியர்களுக்கு தேவையற்ற பணிச்சுமையையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தக்கூடாது.

எனவே, தலைமை ஆசிரியர்கள் தினசரி பாடம் நடத்தும் விவரங்களை GPS வசதியுடன் கூடிய புகைப்பட ஆதாரமாக பதிவு செய்து, நேரம் மற்றும் இட விவரங்களுடன் கல்வித்துறைக்கு சமர்ப்பிக்கும் நடைமுறையைஅரசு கொண்டு வர வேண்டும்.

மேலும், ஆசிரியர்களிடமிருந்து பெறப்படும் புகார்களை மாவட்ட கல்வி அலுவலர்கள் உடனடியாக விசாரித்து, விதிமுறைகளை மீறும் அதிகாரிகள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இடைநிலை ஆசிரியர்களை அச்சுறுத்துவது மற்றும் தேவையற்ற வகையில் தொந்தரவு செய்வதை உடனடியாக தடுத்து, அவர்களுக்கு உரிய மரியாதை, பணிப் பாதுகாப்பு மற்றும் சுமையற்ற பணிச்சூழலை அரசு உறுதி செய்ய வேண்டும்.

இதுதொடர்பாககள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட கல்வித்துறை அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என புரட்சி பாரதம் கட்சியின் கள்ளக்குறிச்சி கிழக்கு மாவட்ட செயலாளர் முனைவர் K.K. ஏழுமலை கோரிக்கை விடுத்துள்ளார்.

## ராகுல் காந்தியை முன்னிறுத்தும் மற்றொரு முயற்சி: டெல்லி போராட்டம் மீது பாஜக விமர்சனம்



டெல்லியில் பாஜக தலைமையகத்தில்செய்தியாளர்களை சந்தித்த அக்கட்சியின் தேசிய செய்தித் தொடர்பாளர் சம்பித் பத்ரா, "உச்ச நீதிமன்றத்தின் கருத்துக்களைத் தவறாக மேற்கோள்காட்டி, குழப்பத்தை ஏற்படுத்தவும் தனது அரசியல் செல்வாக்கை உயர்த்தவம்ராகுல்காந்தி முயல்கிறார்.

தேர்தல் ஆணையம் தொடர்பான பொதுநல மனுவை நேற்று விசாரித்த உச்ச நீதிமன்றம், படிவம் 6 சட்டவிரோதமானது என்று கூறவில்லை. அது நோட்டீஸ் மட்டுமே அனுப்ப உத்தரவிட்டுள்ளது. இன்னும் விசாரணைகூட நடைபெறவில்லை. விசாரணை நடைபெறும்போது இந்த விவகாரம் பரிசீலிக்கப்படும் என்று தலைமை நீதிபதி கூறி இருக்கிறார்.

நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், ராகுல் காந்தியை அதிகாரத்தில் அமர்த்துவதற்கும் சில எதிர்க்கட்சிகள் குறிப்பாக காங்கிரஸ் கட்சி ஒரு திட்டமிட்ட முயற்சியை மேற்கொண்டு வருகிறது. இதற்காக,நாட்டின் ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பு சார்ந்த நிறுவனங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இந்த செயல்முறைசிலமாதங்களுக்கு முன்புதொடங்கவில்லை. இது கடந்த சில ஆண்டுகளாகவே நடைபெற்று வருகிறது.

ஆரம்பத்தில் இருந்தே ராகுல் காந்தியை எப்படியாவது முன்னிறுத்த காங்கிரஸ் கட்சி தொடர்ந்து முயன்று வருகிறது. பல முயற்சிகளுக்குப்பிறகும் அவர்மக்களிடம்போதிய வரவேற்பைப்பெறத்தவறிய நிலையில், அராஜகத்தை உருவாக்கியோ, நாட்டின் ஜனநாயகத்தை சீர்குலைத்தோ எப்படியாவது அவரை அரசியல் ரீதியாக முன்னுறுத்தியே தீருவது என காங்கிரஸும் அதன் சில கூட்டணி கட்சிகளும் முடிவு செய்துள்ளன.

'சூனியக்காரி' என கிண்ட முடிவுகள் தறபோது அறிவிக்கப்பட்டுள்ளன. அங்கு 4,597 இடங்களுக்கு வாக்குச்சீட்டு முறையிலேயே தேர்தல் நடத்தப்பட்டது. இதில், தேசிய ஜனநாயகக்கூட்டணி 4,320 இடங்களிலும், காஙகிரஸ் 14 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. வாக்குச்சீட்டு முறையிலும்கூட மக்கள் காங்கிரஸை நிராகரித்துவிட்டார்கள்" என தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்டம், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் ஈரோடு முதன்மை மாவட்ட நீதிபதி எஸ்.சமீனா மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆகியோர் நேற்று (06.10.2026) சமரச தீர்வு மைய விழிப்புணர்வு பேரணியினை துவக்கி வைத்து, சமரச தீர்வை மையத்தில் தீர்வு பெற்றவர்களுக்கு உரிய ஆணையினை வழங்கினார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி உட்பட பலர் உள்ளனர்.

# மணிப்பூரில் பெண்கள் உதவியுடன் சட்டவிரோத ஆயுத விற்பனை; வாலிபர் கைது



மணிப்பூரில் பெண்கள் உதவியுடன் சட்டவிரோத ஆயுத விற்பனையில் ஈடுபட்ட வாலிபர் கைது செய்யப்பட்டார்.

மணிப்பூரில் 2023-ம் ஆண்டு மெய்தி மற்றும் குகி என இரு இனக்குழுக்களுக்கு இடையே மோதல்வெடித்தது.இந்த மோதல் வன்முறையாக மாறியது.இதில்,306 பேர் பலியானார்கள். 49 பேரை காணவில்லை.

வன்முறையை அடுத்து, ஆயிரக்கணக்கானோரின் வீடுகள் சூறையாடப்பட்டன.இதனால், மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, ராணுவபடைகள் குவிக்கப்பட்டு வன்முறை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இதன்பின்னர், அமலில் இருந்தஜனாதிபதி ஆட்சி விலக்கிக்கொள்ளப்பட்டது. கடந்த பிப்ரவரி மாதம் பா.ஜ.க.வை சேர்ந்த ஒய்.கே. சிங் முதல்-மந்திரியாக பதவியேற்றார்.

**தீவிர சோதனை**

எனினும், அவ்வப்போது மோதல்கள் நடந்து வருகின்றன.இந்த நிலையில், மணிப்பூரின் கிழக்கு இம்பால் மாவட்டத்தில் சட்டவிரோத ஆயுத விற்பனை நடக்கிறது என வெளியான தகவலை தொடர்ந்து, பாதுகாப்பு படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.அப்போது தம்பல்னு சந்தை பகுதியில் நடத்திய சோதனையில் சந்தேகத்திற்குரிய வகையில் திரிந்த 23 வயது வாலிபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணை செய்ததில், ஆயுதங்கள், வெடிபொருட்கள் மற்றும் வெடிகுண்டுகள் உள்ளிட்டவற்றை சட்டவிரோத வகையில் அவர் விற்பனை செய்தது தெரிய வந்துள்ளது.

**ரூ.10 ஆயிரம்**

கடந்த ஜூலையில், 2 பெண்கள் மூலம் ஒருவரிடம் ரூ.10 ஆயிரம் பணம் பெற்றுக்கொண்டு, அவருக்கு கையெறி குண்டு ஒன்றை விற்றுள்ளார் என்பதும் தெரிய வந்துள்ளது.

இதன்பின்னர் அவர் ஆந்திரோ காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். தவிர, நேற்று குகிமுன் கிராமத்தில் நடந்த சோதனையில், 2 இயந்திர துப்பாக்கிகள், 3 கைத்துப்பாக்கிகள், 7 ஒற்றை குழல் துப்பாக்கிகள், கையெறி குண்டு ஒன்று, வெடிகுண்டு மற்றும் பிற ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

# வர்த்தக நிறைவில் 2வது நாளாக ஏற்றம் கண்ட பங்குச்சந்தைகள்



இந்திய பங்குச்சந்தை தொடர்ந்து 2-வது நாளாக இன்று ஏற்றம் கண்டது. இதன்படி, நாள் முடிவில் மும்பை பங்கு சந்தையில் சென்செக்ஸ் குறியீடு 685.34 புள்ளிகள் அல்லது 0.95 சதவீதம் உயர்ந்து 73,067.81 புள்ளிகளில் நிலை கொண்டது.தேசிய பங்கு சந்தையில் நிப்டி குறியீடு 220.35 புள்ளிகள் அல்லது 0.98 சதவீதம் உயர்ந்து 22,776.10 புள்ளிகளில் நிலை கொண்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக இந்திய பங்குச்சந்தைகள் கடும் சரிவை சந்தித்து வந்த நிலையில், நேற்றும், இன்றும் காணப்படும் இந்த ஏற்றம் முதலீட்டாள ர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. நிறுவனங்களும் லாபம் அடைந்துள்ளன.

இதில், டிரென்ட், கோடக் மஹிந்திரா வங்கி, எச்.யு.எல்., எச்.டி.எப்.சி. லைப், ஜியோ பைனான்சியல் ஆகியவை நிப்டியின் முக்கிய லாபம் ஈட்டிய நிறுவனங்களாக உள்ளன. எனினும் கோல் இந்தியா, டெக் மஹிந்திரா, மேக்ஸ் ஹெல்த்கேர், ஐ.டி.சி.மற்றும் இன்போசிஸ்ஆகியநிறுவனங்கள் நஷ்டம் அடைந்துள்ளன.

இதற்கு கச்சா எண்ணெய் விலை குறைவு முக்கிய காரணியாக பார்க்கப்படுகிறது. அதனுடன், ரிசர்வ் வங்கியின் நிதி கொள்கை முடிவு நாளை வெளியிடப்பட உள்ள சூழலில், முதலீட்டாளர்கள் தொடர்ந்து உன்னிப்பாக அதில் கவனம் செலுத்தி வருகின்றனர். இவை சந்தைகளில் லாப நோக்குடன் பங்குகள் விற்பனை க்கான காரணிகளாக உள்ளன.

# 'AI used to show cops in bad light': Haryana man arrested for circulating 'fabricated' video showing police harassing woman journalist



*A 24-year-old man has been arrested on charges of creating and circulating AI-generated reels and posters showing police officers sexually harassing a woman journalist during the protests against the Election Commission of India (ECI) in central Delhi, a senior police officer said on Tuesday.*

*Police said the fabricated posts included AI-generated images of assistant commissioner of police (ACP) Vivek Bhagat, who was accused by a woman of sexual harassment during Saturday's protest near central Delhi.*

*Additional deputy commissioner of police (New Delhi district) Manjeet Sheoran said Nadeem Ahmad of Palwal in Haryana launched his Instagram channel, "news_aaina0776", in April-May this year ahead of the Cockroach Janta Party (CJP) protests at Jantar Mantar. The channel, run by the Class 10 dropout, currently has over 24,000 followers, he said. Sheoran said the district's social media monitoring cell flagged AI-generated reels and posters on Instagram and Facebook that were being presented as "genuine CCTV footage of the protest site". In one of the AI-generated poster, for instance, a police officer was shown groping a woman during the protest as if it were a screenshot of CCTV footage." Ahmad's interrogation revealed that his motive behind creating and circulating the fabricated and objectionable images of a police officer was to tarnish the image of the Delhi Police, create unrest and incite the protesters to attack the police," he added.*

*Nadeem Ahmad was arrested on October 5. His initial interrogation indicated that he created the fabricated content on October 3 and circulated it on October 4. Police said Ahmad was being questioned to ascertain the source of funding, identify his associates and look into the possibility that he was creating the objectionable content as part of a pre-planned conspiracy to instigate protesters and cause riots.*

# பெரியநாயகி உடனுறை பழமலைநாதர் கோயிலில் 14 மாதங்களாக தொடரும் அன்னதான சேவை



விருத்தாச்சலம்: கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ பெரியநாயகி உடனுறை பழமலைநாதர் திருக்கோயிலுக்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர்.இவ்வாறு வரும் பக்தர்களின் பசியைப் போக்கும் நோக்கில், கடந்த 14 மாதங்களாக தொடர்ந்து அன்னதான அறப்பணி நடைபெற்று வருகிறது.

சமூக ஆர்வலரும், பா.ஜ.க. மாவட்ட ஓ.பி.சி. அணி பொதுச் செயலாளருமான எ. கொளப்பாக்கம் இளையராஜா இந்த அன்னதானப் பணியை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார். ஆன்மிகப் பணியுடன் சமூக நலனையும் இணைக்கும் வகையில், பக்தர்களுக்கு உணவு வழங்கும் சேவையில் அவர் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

இப்பணிக்கு அவரது தொழில் நிறுவனங்களான ஓம் சக்தி குரூப்ஸ் & ரியல் எஸ்டேட், எர்த் மூவர்ஸ் மற்றும் விவசாயிகளின் தோழனான நவீன நெல் அறுவடை இயந்திர சேவை ஆகியவை முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றன.

இந்நிறுவனங்களின் சார்பில் கிடைக்கும் வருவாயின் ஒரு பகுதி அன்னதானப் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், சனிக்கிழமையும் தவறாமல் அன்னதானம் வழங்கப்பட்டு வருவதுடன்,இதன் மூலம் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. ஓராண்டுக்கும் மேலாக எந்தவித இடையூறும் இன்றி இச்சேவை தொடர்வது குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

இதன் தொடர்ச்சியாக, அக்டோபர் 6-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அன்னதான நிகழ்வில் 100-க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இதில் பங்கேற்ற பக்தர்கள் உணவருந்தி இச்சேவையை பாராட்டினர்.

தொழில் வளர்ச்சியுடன் சமூகப் பொறுப்பையும் இணைத்து, ஆன்மிகத் தலத்தில் தொடர்ந்து அன்னதானப் பணியை மேற்கொண்டு வரும் இளையராஜாவின் முயற்சி, பக்தர்கள் மற்றும் பொதுமக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.தொடர்ந்து 14 மாதங்களாக நடைபெற்று வரும் இந்த அறப்பணி, உணவு வழங்குவதைக் கடந்து மனிதநேயத்தை முன்னிறுத்தும் சேவையாக அமைந்துள்ளது.

# நியாயமான விசாரணையின்றி டாஸ்மாக் ஊழியர்களை பணிநீக்கம் செய்யக் கூடாது: ஐகோர்ட் உத்தரவு



சென்னை: மது பாட்டிலுக்கு கூடுதல் கட்டணம் வசூலித்ததற்காக நியாயமான விசாரணை நடத்தாமல் டாஸ்மாக் பணியாளர்களை பணிநீக்கம் செய்யக்கூடாது என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டாஸ்மாக் கடைகளில் மதுபானங்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்தால், தற்காலிக பணிநீக்கம், பணியிடமாற்றம் உள்ளிட்ட நடவடிக்கைகளும், தொடர்ந்து இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டால், குற்ற குறிப்பாணை அனுப்பி விசாரணை நடத்தி பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என, டாஸ்மாக் நிர்வாகம் கடந்த ஜூலை 24-ஆம் தேதி சுற்றறிக்கை பிறப்பித்தது.

இந்த சுற்றறிக்கையை ரத்து செய்ய வேண்டும் என தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையா ளர்கள் நலச் சங்கத்தின் செயலாளர், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கே. சுரேந்தர், இயற்கை நீதியைப் பின்பற்றாமல், பணியாளர்களுக்கு எதிராக எந்த ஒரு தண்டனை நடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடாது.

நியாயமான, முறையான விசாரணைக்குப் பிறகுதான், தண்டனைகள் விதிக்கப்பட வேண்டும். அவ்வாறு தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பு தொழிலாளர்கள் தங்கள் தரப்பு வாதங்களை முன்வைக்க போதுமான அவகாசத்தை வழங்க வேண்டும்.

எனவே, இந்த சுற்றறிக்கையின் அடிப்படையில் எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கை எடுத்தாலும், தண்டனை விதித்தாலும், அது இயற்கை நீதி, பணி விதிகள் மற்றும் சட்ட விதிகளைப் பின்பற்றியே இருக்க வேண்டும்.

தொழிலாளர்கள் தங்கள் தரப்பு விளக்கத்தை அளிக்க நியாயமான விசாரணை நடத்தாமலும்,எந்த தொழிலாளர்களும் தண்டிக்கப்படவோ, இடமாற்றம் செய்யப்படவோ, பணிநீக்கம் செய்யப்படவோ கூடாது என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

# "செவிலியர்கள் மீதான காவல்துறை அராஜகம் கொடூரத்தின் உச்சம்" எடப்பாடி பழனிசாமி கண்டனம்



சென்னை: "செவிலியர்கள் மீது காவல்துறை அரங்கேற்றியுள்ள அராஜகம் என்பது கொடூரத்தின் உச்சம்.செவிலியர்கள் மீது வழக்கு பதியாமல், அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட்டு, அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும் என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில், தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அறவழியில் போராட்டம் நடத்திய செவிலியர்கள் மீது இன்றைய தவெக அரசின் காவல்துறை அரங்கேற்றியுள்ள அராஜகம் என்பது கொடூரத்தின் உச்சம். "பாசிசம், பாயாசம்" என்று ரைமிங் வசனங்கள் பேசிய முதல்வரின் கையில் இருக்கும் காவல்துறை,உயிர் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள செவிலியர்கள் மீது நடத்தியுள்ள பாசிச அக்கிரமத்தை எப்படி இந்த ரீல்ஸ் முதல்வர் நியாயப்படுத்துவார்?

ஆட்சிக்கு வருவதற்கு முன், இதே செவிலியர்கள் முன் நின்று உங்கள் கட்சி நிர்வாகிகள், இன்றைக்கு அமைச்சராக இருப்பவர்கள் பேசியது எல்லாம் நினைவில் இருக்கிறதா? ஆட்சிக்கு முன் ஒரு பேச்சு, ஆட்சிக்கு பின் அதற்கு மாறான செயல் என்பது தான் மாற்றமா? தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் பரவுவது குறித்து மக்கள் பிரச்சினையை சுட்டிக்காட்டினால் கூட ஏற்றுக்கொள்ள மனமின்றி அவதூறுகளை அள்ளி வீசும் நபராக இருக்கிறார் இன்றைய சுகாதாரத் துறை அமைச்சர்.தனது துறையைச் சார்ந்த செவிலியர்கள் போராடுவது குறித்து ஒரு வார்த்தை பேசினாரா? செவிலியர்களிடம் வந்து பேச்சுவார்த்தை நடத்துவதை விட அப்படி என்ன பெரிய வேலை இருக்கிறது இந்த அமைச்சருக்கு? இடத்தில் மின்சாரத்தைதுண்டிப்பது, பேச்சுவார்தை எனக் கூறி அழைத்துச் சென்று கைது செய்வது என மிகவும் கீழ்த்தரமாக ஒரு போராட்டத்தை அணுகியுள்ள இன்றைய ஆச்சரியக்குறி அரசுக்கு எனது கடும் கண்டனம்.

கைது செய்யப்பட்டுள்ள செவிலியர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட்டு, அவர்கள் மீது எந்த வழக்கும் பதியாமல் இருப்பதைஉறுதிசெய்து, ஜனநாயக ரீதியாக அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும் என இந்த அரசை வலியுறுத்துகிறேன்." இவ்வாறு அவர் பதிவிட்டு உள்ளார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.